இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் *9196-97/2019*

(சிறப்பு அனுமதி மனு (உ) எண்கள் 9630-31/2019-லிருந்து எழுகிறது)

மலர்விழி மற்றும் பலர் ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ்
கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜெய ஒய். சந்திரசூட்:

1. முதல் மேல்முறையீட்டில், மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் கூட்டமர்வின் *2018*-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் *20*-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் இராணிப்பேட்டை மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயத்தின்[1] தீர்முடிவில் எழுந்த எதிர் மறுப்புரை ஆகியவற்றிலிருந்து தற்பொழுதைய மேல்முறையீடுகள் எழுகின்றன.

2. மேல்முறையீட்டாளர்கள், *25.05.2001* அன்றைய விபத்தின் விளைவாக மரணமடைந்த அரங்கநாதனின் வாரிசுகள் மற்றும் சட்டப் பிரதிநிதிகள் ஆவர். அவர் மற்றொரு நபரால் ஓட்டப்பட்ட, பதிவு எண் TN *23* A *7549* கொண்ட அம்பாசிடர் மகிழ்வுந்தில் பயணித்துக் கொண்டிருந்தார். இரவு சுமார் *12.45* (மணியளவில்), எதிர் திசையிலிருந்து வந்த பதிவு எண் TN *20* Z *1613* கொண்ட டாடா சியாரா

---

1. தீர்ப்பாயம்

மகிழ்வுந்து இறந்தவரின் காருக்கு எதிராக மோதியது. விபத்தின்போது அரங்கநாதன் பலத்த காயமடைந்து இறந்தார். அவர் இந்நீதிமன்றத்தின் மேல்முறையீட்டாளர்களான அவருடைய மனைவி மற்றும் நான்கு மகள்களை வாரிசுகளாக விட்டுச் சென்றார்.

3. மேல்முறையீட்டாளர்கள், இழப்பீட்டுத் தொகையாக ரூ.99,90,000/-ஐ கோரி, தீர்ப்பாயத்தின் முன்பாக 1988-ஆம் ஆண்டைய மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 166-இன் கீழ் கோரிக்கை மனுவைத் தாக்கல் செய்தனர். தீர்ப்பாயமானது, 11.7.2012-ஆம் தேதியிடப்பட்ட அதன் தீர்வத்தின் மூலமாக, கோருரிமைத் தொகை ரூ.59,04,000/-ஐ கோருரிமை மனு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து தீர்ப்பாணையிடப்பட்ட தொகை கைவரப்பெறும் நாள்வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் பெற அனுமதித்தது. மேல்முறையீட்டாளர்கள் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் முதல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தனர். உயர் நீதிமன்றம் தன்னுடைய எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின் மூலம், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டைப் பகுதியாக அனுமதித்தது. உயர் நீதிமன்றமானது, மரணமடைந்தவரின் ஆண்டு வருமானம் ரூ.4,48,790.55/-இல் இருந்து ரூ.2,50,000/-ஆக குறைத்து மதிப்பிட்டது. இவ்வாறாக, வழங்கப்பட்ட மொத்த இழப்பீடானது ரூ.59,04,000/-த்திலிருந்து ரூ.35,55,000/-ஆக குறைக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையால் பாதிப்படைந்து, கோரிக்கையாளர்கள் இந்நீதிமன்றத்தின் முன்பு மேல்முறையீட்டில் உள்ளனர்.

4. விபத்து நடந்த நேரத்தில் மரணமடைந்தவர் 49 வயதுடையவராவார். மரணமடைந்தவர் ஒரு வணிகராவார். அவர் வணிக மற்றும் 36.76 ஏக்கர் விவசாய

நிலங்கள் உட்பட பலவகையில் வருவாய் ஈட்டினார் என்றும் மேல்முறையீட்டாளர்கள் வாதிட்டனர். மரணமடைந்தவர் மொத்த சிமெண்ட் வணிகர்களுள் ஒருவராவார் மற்றும் மதுபானக் கடைகளும் வைத்திருந்தார் எனக் கூறப்பட்டது, மரணமடைந்தவரின் மரணத்திற்குப் பின்னர் பண வசூல் நடவடிக்கைகளில் நிலமானது விற்கப்பட்டது.

5. தீர்ப்பாயமானது, மரணமடைந்தவரின் ஆண்டு விவசாய வருமானம் ஆண்டிற்கு ரூ.3,40,708/- எனவும் மற்றும் வணிகத்திலிருந்து மொத்த வருமானம் ரூ.89,590/- எனவும் மதிப்பிட்டது. தீர்ப்பாயமானது, நிலப்பரிவர்த்தனை வணிகம் மற்றும் ஒப்பந்த வணிகம் ஆகியவற்றின் மூலம் ஆண்டு வருமானம் ரூ.30,000/-ஐ இத்துடன் சேர்த்தது. மரணமடைந்தவரின் ஆண்டு வருமானம் ரூ.4,60,298/- என மதிப்பிடப்பட்டது. எதிர்கால வாய்ப்பாக ஆண்டு வருமானத்தில் 30% சேர்க்கப்பட்டது, ஆண்டு வருமானத்தை ரூ.5,98,387.40/-க்கு கொண்டு வருகிறது. வாழ்க்கைச் செலவினங்களுக்காக மொத்த வருமானத்தில் ¼ கழித்தலுக்குப் பின்னர், இழப்பீட்டுத் தொகை ரூ.58,34,277/- என முடிவு செய்ய தீர்ப்பாயமானது, பெருக்கல் விகிதம் 13-ஐப் பயன்படுத்தியது. வழக்கமான தலைப்பின் கீழ் இழப்பீடானது, ஈமச்சடங்கு செலவினங்கள் உட்பட, தாம்பத்ய இழப்பு மற்றும் அன்பு மற்றும் பாசத்தின் இழப்பு ஆகியவற்றிற்கு ரூ.70,000/- எனக் கணக்கிடப்பட்டது. மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.59,04,000/- வழங்கப்பட்டது.

6. மேல்முறையீட்டில், மரணமடைந்தவரால் தாக்கல் செய்யப்பட்ட 1995-1996 முதல் 2000-2001 வரையிலான வருமான வரி விவரங்களின் பகுப்பாய்வானது, 1997-1998-ஆம் நிதியாண்டிற்கான அறிவிக்கப்பட்ட வருமானம் அதிகமானது என்றும், அது மரணமடைந்தவரின் ஆண்டு வருமானமாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் முடிவு செய்தது. எனவே, மரணமடைந்தவரின் ஆண்டு

வருமானம் ரூ.2,09,211/- என உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. எதிர்கால வாய்ப்பாக ஆண்டுக்கு ரூ.40,000/- சேர்க்கப்பட்டது. இவ்வாறாக, மொத்த வருமானம் ஆண்டுக்கு ரூ.2,50,000/- என்னும் முடிவு எட்டப்பட்டது. சொந்த செலவினங்கள் குறித்து கழிவு எதுவும் செய்யப்படவில்லை. பெருக்கல் விகிதம் 13-ஐ பொருத்தி அல்லது பயன்படுத்தி, சார்பிழப்பானது ரூ.32,50,000/- எனக் கணக்கிடப்பட்டது. இதற்கு, ஈமச்சடங்கு செலவினங்கள், தாம்பத்ய இழப்பு, அன்பு மற்றும் பாசம் ஆகியவற்றிற்கு ரூ.1,05,000/- எனச் சேர்க்கப்பட்டது. மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.33,55,000/- வழங்கப்பட்டது.

7. இழப்பீட்டுத் தொகையைக் குறைத்தலை எதிர்த்து மேல்முறையீட்டாளர் தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஜெயந்த் முத்ராஜ் வாதிட்டதாவது:

(i) ஆண்டு வருமானத்தைத் தீர்மானிப்பதில், மற்ற ஆவணங்களைவிட வருமான வரி விவரங்கள் முன்னுரிமை பெறுகின்றன என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பல்வேறு வகைகளிலிருந்து வருமானத்தைத் தெரிவிக்கும் 52-க்கும் மேற்பட்ட ஆவணங்கள் தீர்ப்பாயத்தின் முன்பு குறியிடப்பட்டன, அவை அனைத்தும் வருமான வரி விவரங்களில் கூறப்படவில்லை;

(ii) மரணமடைந்தவரின் ஆண்டு வருமானத்தைக் கணக்கிடுவதில், அவருக்கு வழங்கப்பட்ட பிற ஒப்பந்தப் பணிகள் மற்றும் அவருடைய கடன் தீர்வுத் தகுதிச் சான்றிதழ்கள் ஆகியவற்றைப் பரிசீலிக்காமையில், உயர் நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது;

(iii) வருமானத்தின் தீர்மானமாக, 1997-1998-ஆம் நிதியாண்டிற்கான வருமான வரி விவரத்தில் வெளிப்படுத்தப்படும் வருமானத்தைக் கவனத்தில் கெள்வதில் உயர் நீதிமன்றமானது நியாயப்படுத்தப்படுகிறது என அனுமானித்தாலுங்கூட, அவ்வருமான வரி விவரத்தில் வெளிப்படுத்தப்படும் நிலையான சொத்துகளின் தேய்மானத் தொகைகளை கணக்கில் எடுத்துக்கொள்ளாமையால், உயர் நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது; மற்றும்

(iv) மரணமடைந்தவரின் வர்த்தகம் மற்றும் மதுபான வணிகம் ஆகியவற்றின் வருமானத்தைக் கவனத்திற்கொண்டு, அவருடைய மாதாந்திர வருமானம் ரூ.50,000/-ஆக உயர் நீதிமன்றம் கணக்கிட்டிருக்கவேண்டும்.

8. மறுபுறத்தில், எதிர்மேல்முறையீட்டாளர்களின் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டதாவது:

(i) மரணமடைந்தவரின் ஆண்டு வருமானத்தைத் தீர்மானிக்க, அவருடைய வருமான வரி விவரத்திற்கு முன்னுரிமை அளிப்பதில் உயர் நீதிமன்றம் நியாயப்படுத்தப்படுகிறது;

(ii) வங்கிகளுக்கு செலுத்தவேண்டிய கடனைத் தீர்க்க சொத்துகளை விற்றதால் மேல்முறையீட்டாளர் நட்டம் அடைந்துள்ளார் என்ற வாதத்தில் நற்கூறு ஏதுமில்லை;

(iii) நிலையானச் சொத்துகளின் தேய்மானத் தொகையானது மரணமடைந்தவரின் வருமானத்துடன் சேர்க்கப்படமுடியாது; மற்றும்

(iv) உயர் நீதிமன்றத்தின் தீர்வமானது, சட்டப்பூர்வமாக நிலைக்கத்தக்கது மற்றும் இந்நீதிமன்றத்தின் குறுக்கீட்டைக் கோரவில்லை.

9. எங்களுடைய பரிசீலனைக்கு வரும் எதிரெதிர் வாதங்கள்.

10. தீர்ப்பாயமானது, உயர் நீதிமன்றத்தின் இரண்டு தீர்ப்புரைகளின் அடிப்படையில், 36.76 ஏக்கர் விவசாய நிலத்திலிருந்து வரும் விவசாய வருமானத்தைத் தீர்மானிக்க விழைந்தது. தீர்ப்பாயமானது, முடிவுகளைப் பயன்படுத்துவதன்மூலம் இரண்டு வெவ்வேறு தொகைகளைத் தீர்மானித்தது மற்றும் இரண்டு தொகைகளின் அடிப்படையில் விவசாய வருமானத்தின் சராசரியைத் தீர்மானிக்க விழைந்தது. வருமான வரி விவரங்களில், விவசாய நிலத்திலிருந்து வரும் வருமானம் குறித்துத் தெளிவான குறிப்பு இருந்தபொழுதிலும், தீர்ப்பாயமானது, விவசாய நிலத்திலிருந்து வரும் வருமானத்தின் சாத்தியமான மதிப்பை மிகைப்படுத்தியது. தீர்ப்பாயத்தினால் பின்பற்றப்பட்ட முறையானது சட்டத்தில் நிலைக்கத்தக்கதல்ல. மறுபுறத்தில், வருமான வரி மதிப்பீட்டு ஆண்டு 1997-1998-க்கான வருமான வரி விவரத்தில் வெளிப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் செயல்பட்டது. வருமான வரி விவரத்தின் தொடர்புடைய பகுதி பின்வருமாறு தெரிவிக்கிறது:

"வீட்டு சொத்திலிருந்து வருமானம் - ரூ. 1,920

வணிக ஆதாயம் (14 பி தவிர) - ரூ. 1,21,071

நிகர விவசாய வருமானம் - ரூ. 88,140"

வருமான வரி விவரமானது, தொடர்புடைய வருமான வரி மதிப்பீட்டு ஆண்டின் வருமானம் ரூ.2,11,131/- எனத் தெரிவிக்கிறது. மரணமடைந்தவரின் வருமானத்தை வெளிப்படுத்தும் பிற ஆவணங்கள் குறியிடப்பட்டன என மேல்முறையீட்டாளர் தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஜெயந்த் முத்ராஜ் வாதிட்டார். வருமான வரி விவரங்கள் இருக்குமிடத்து, அதனடிப்படையிலேயே தீர்மானிக்க முற்படவேண்டுமென நாங்கள் உயர் நீதிமன்றத்துடன் உடன்படுகிறோம். மேல்முறையீட்டாளர்களின் ஆதாயத்திற்கு, உயர் நீதிமன்றமானது, மதிப்பீட்டு ஆண்டு 1997-1998-க்கான வருமானத்தின் அடிப்படையில் செயற்பட்டுள்ளது மற்றும் மரணமடைந்தவரின் ஆண்டு வருமானத்தில் கழிவை வெளிப்படுத்திய 1999-2000 மற்றும் 2000-2001-க்கான வருமானத்தின் அடிப்படையில் செயற்படவில்லை.

11. நீதிமன்றமானது, மரணமடைந்தவருக்கு சேரும் வருமானத்தைத் தீர்மானிக்கவேண்டும் மற்றும் விவசாய நிலத்தைப் பேணிப் பாதுகாக்க ஏற்கப்படும் செலவினங்களையும் கணக்கிடவேண்டும் என்றும் இந்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட **தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி -எதிர்- யோகேஷ் தேவி**[2] என்ற வழக்கின் தீர்ப்புரைக்கு மேல்முறையீட்டாளரின் தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் இந்நீதிமன்றத்தின் கவனத்தை ஈர்த்தார். அவ்வழக்கில், "மேற்கூறப்பட்ட சொத்துகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் தொடர்பாக சான்றேதும் இல்லை" என்ற

2. (2012) 3 எஸ்.சி.சி. 613

கோரிக்கைக் குறித்த வழக்கை இந்நீதிமன்றத்தின் இரு நீதியரசர்களின் அமர்வு கையாண்டது. கோரிக்கையாளரின் கூற்று ஒன்றே, மரணமடைந்தவரின் மாதாந்திர வருமானம் தொடர்பான சான்றாகும். தற்போதைய வழக்கில், உயர் நீதிமன்றமானது, மரணமடைந்தவரின் வருமான வரி விவரத்தையே சார்ந்துள்ளது. மேலும், மேலாளர்களை நியமிப்பதற்காக ஊதியங்கள் வழங்குவதால், மரணமடைந்தவரின் சொத்துகளிலிருந்து வரும் நிகர வருமானத்தின் குறைவை கணக்கு காட்ட நீதிமன்றம் கோரப்படும்பொழுதிலும், சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என, **நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்** என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. நீதிமன்றம் தீர்ப்பளித்ததாவது:

> "வழக்கமான நடைமுறையில், மேற்கூறப்பட்ட காரணிகளின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட சொத்தின் வருமான குறைவின் அளவு தொடர்பாக சான்றுகள் சமர்ப்பிக்க கோரிக்கையாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்."

தற்போதைய வழக்கில் மரணமடைந்தவருக்கு கிடைக்கும் நிகர வருமானத்தின் குறைவு குறித்து வழக்கின் எக்கட்டத்திலும் மேல்முறையீட்டாளர்களால் சான்றேதும் சமர்ப்பிக்கப்படவில்லை. **நியு இந்தியா அஷ்யூரன்ஸ்** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது மேல்முறையீட்டாளரின் வழக்கிற்கு உதவவில்லை.

12. 1997-1998-ஆம் ஆண்டின் வருமான வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான விவரத்தில் வெளிப்படும் மரணமடைந்தவரின் நிலைச் சொத்தின் தேய்மானத் தொகைகள் ரூ.*21,642*, *74,685* மற்றும் *7701* ஆகியவற்றை மரணமடைந்தவரின் ஆண்டு வருமானத்தில் சேர்க்கவேண்டும் என மேல்முறையீட்டாளருக்காக

முன்னிலையாகும் திரு. ஜெயந்த் முத்ராஜ் வாதிட்டார். எங்களால் இவ்வாதத்திற்கு இணங்க முடியவில்லை. தேய்மானம் என்பது, புலப்படும் மற்றும் புலப்படாத சொத்தின் பயன்பாட்டினால் அதன் உண்மையான மதிப்பில் ஏற்படும் குறைவானது அனுமதிக்கப்படும் ஒரு கழிவாகும். அதன் மதிப்பு, காலத்தால் மாறுபடுகிறது மற்றும் மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயத்தின் முன்பான கோரிக்கையில் ஆண்டு வருமானத்தை கணக்கிடும் நோக்கத்திற்காக அது உறுதியான வருமானமாகாது.

13. கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஜெயந்த் முத்ராஜ், சோளிங்கர், பாவை மதுபானக் கடையின் 31.3.1997-ஆம் தேதியிடப்பட்ட இருப்புநிலைக் குறிப்பின் மீது நம்முடைய கவனத்தை ஈர்த்தார். வருமான வரி விவரத்தில் ஆண்டுக்கு ரூ.1,04,987/- முன் செலுத்தப்பட்ட உரிமக் கட்டணமாக தமிழ்நாடு அரசுக்கு செலுத்தப்பட்டதாக, வெளிப்படுகிறது. வழக்கின் தனிப்பட்ட சூழ்நிலைகளில், எதிர்காலத்திற்கு, முன்னதாகவே செலுத்தப்பட்டிருக்கும் இத்தொகையானது, மரணமடைந்தவரின் ஆண்டு வருமானத்தில் சேர்க்கப்பட வேண்டியுள்ளது. இவ்வாறாக, மரணமடைந்தவரின் நிகர ஆண்டு வருமானமானது: ரூ.2,11,131 + 1,04,987 = ரூ.3,16,118.

14. மேல்முறையீட்டாளர்களுக்கு செலுத்தத்தக்க தொகையின் தீர்மானம் பின்வருமாறு:

(i) விபத்தின் நேரத்தில், மரணமடைந்தவர் 49 வயதுடையவரும் மற்றும் சுய-பணிபுரிபவருமாவார். **நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்-**

பிரணய் சேத்தி[3] என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வின் தீர்ப்புரையின்படி, எதிர்கால வாய்ப்பிற்காக, ஆண்டு வருமானத்தின் 25% சேர்க்கப்பட வேண்டியுள்ளது. ரூ.3,16,118-இன் 25% = 79,029.5 ஆகும். எதிர்கால வாய்ப்பிற்காக கணக்கிடப்படும் ஆண்டு வருமானமானது, ரூ.3,16,118 + 79,029.5 = ரூ.3,95,147.5; மற்றும்

(ii) **சர்லா வர்மா -எதிர்- டெல்லி போக்குவரத்துக் கழகம் (டெல்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்)**[4] என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் 30-ஆவது பத்தியின்படி, சார்பாளர்கள் நான்கு முதல் ஆறு வரையிலானவர்களாக இருக்குமிடத்து, திருமணமானவரின் சொந்தச் செலவினங்களுக்கான கழிவு 1/5 ஆகும் அல்லது 20% ஆகும். ரூ.3,95,147.5-இன் 20% = ரூ.79,029.5 ஆகும். நிகர ஆண்டு வருமானமானது ரூ.3,95,147.5 - 79,029.5 = ரூ.3,16,118 ஆகும்.

சர்லா வர்மா என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்படி, மரணமடைந்தவர், 46 முதல் 50-க்கு இடைப்பட்ட வயதினராக இருக்குமிடத்து, பொருத்தப்படவேண்டிய பெருக்கல் விகிதம் 13 ஆகும். சார்பிழப்பானது ரூ.3,16,118 x 13 = ரூ.41,09,534 என கணக்கிடப்படுகிறது. **பிரணய் சேத்தி** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்படி, ஈமச்சடங்கு செலவினங்கள்,

---

3 (2017) 16 எஸ்.சி.சி. 680

4 (2009) 6 எஸ்.சி.சி. 121

வாழ்விழப்பு மற்றும் தாம்பத்ய இழப்பு ஆகியவற்றிற்கு முறையே ரூ.15,000, 15,000 மற்றும் 40,000 சேர்க்கப்படவேண்டும்.

15. எனவே, மேல்முறையீட்டாளர்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் இழப்பீடு பெற உரிமையுடையவர்களாவர்:

சார்பு இழப்பு	ரூ. 41,09,534
ஈமச்சடங்கு செலவினங்கள்	ரூ. 15,000
வாழ்விழப்பு	ரூ. 15,000
தாம்பத்ய இழப்பு	ரூ. 40,000
அன்பு மற்றும் பாச இழப்பு	ரூ. 50,000
	ரூ. 42,29,534

16. இவ்வாறாக, மேல்முறையீட்டாளர்களுக்கு செலுத்தவேண்டிய மொத்த இழப்பீட்டுத் தொகையானது ரூ.42,29,534 ஆகும். மனுவைத் தாக்கல் செய்த தேதி முதல் மேல்முறையீட்டாளர்களுக்கு இழப்பீடு செலுத்தும் தேதிவரை ஆண்டுக்கு 9% விகித வட்டியுடன் செலுத்தப்படவேண்டும்.

17. மேலே தெரிவிக்கப்பட்ட அளவில், மேல்முறையீடுகள் பகுதியாக அனுமதிக்கப்படுகின்றன. செலவுத்தொகை குறித்து உத்தரவேதுமில்லை.

18. நிலுவை விண்ணப்பங்கள் ஏதேனுமிருப்பின், அவை முடிக்கப்பெறுகின்றன.

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜெய ஒய். சந்திரசூட்

மாண்புமிகு நீதியரசர் திரு. உறிரிஉஷிகேஉ் ராய்

புது தில்லி,

09.12.2019

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."